# இலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கிய கூறுகள்

ஜெ. அமுதா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்¸பதிவு எண் : 23112014022005
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தழிழாய்வு மையம், தூத்துக்குடி-628002¸
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்¸ திருநெல்வேலி-12
முனைவர் உ. விஜி
நெறியாளர் & இணைப்பேராசிரியர் ¸தமிழ்த்துறை¸
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி¸ தழிழாய்வு மையம்,
தூத்துக்குடி-628002.

48

**ஆய்வுச் சுருக்கம்:**

நாட்டுப்புற பாடல்கள் படிக்காத பாமர மக்களால் வாய்மொழியாக பாடப்படுகின்றன பழங்காலந்தொட்டு இப்பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன இவை இலக்கண வரம்பிற்கு உட்படாதவை ஆகும். நாட்டு மக்களின் பண்பாட்டினையும் பழக்க வழக்கத்தினையும் வெளிகாட்டும் சிறப்பு பெற்றவை. இப்பாடல்களில் அகப்பாடல்களின் இனிமை, எளிமை, உண்மை, உணர்ச்சி, உயிர் ஆகியன பொதிந்து கிடைக்கின்றன. மனித வாழ்வின் எல்லா சுகங்களையும் சுவைகளையும், சோகங்களையும் கிராமிய மக்கள் பாட்டாக வாழ்வின் பல்வேறு கலைக்கூட்டங்களில் பாடியுள்ளனர்.

நாகரீக முதிர்ச்சியின் காரணமாக அவற்றில் சுவையும் நயமும் சேர்ந்தன. தொல்காப்பியரும், சங்கப் புலவர்களும் ,பக்தி இலக்கியம் படைத்து வந்த அருளாளர்களும், வித்தகச் சித்தர்களும் இன்னோரன்ன பிற புலவர்களும் நாட்டுப்புற இலக்கியச் சாயலில் இலக்கியம் படைத்தனர். இத்தகைய இலக்கியப்படைப்பு நடைபெறும் இது வறண்டு போகாத வளமான இயற்கை ஊற்றாக விளங்குவதே இவ்வாய்வின் சுருக்கமாகும்.

**முன்னுரை**

நாட்டுப் பாடல்கள் என்பவை பெரும்பாலும் எழுத்தறிவில்லாத நாட்டுப்புறத்து மக்களிடையே தொன்று தொட்டு வழங்குபவை அவற்றை நாட்டுப்புறப் பாடல்கள் என்றும் கூறலாம். இவற்றை இயற்றியவர் இவை தோன்றிய காலம் என்பனவற்றை அறுதியிட்டு கூற முடியாது. செவி வழியாகவே தலைமுறைதோறும் அவை நீடித்து வந்துள்ளன. எழுத்து வடிவத்தில் யாரும் எழுதி வைக்கவில்லை நாட்டுப்புற பாடல்கள் தாமாக மலர்ந்து மணம் வீசும் காட்டு மலருக்கு ஒப்பானவை. செயற்கை அரண் இன்றித் தழைத்தவை. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தும் மக்களின் உள்ளக்கிளர்ச்சிகளை வெளியிடும் தன்மை வாய்ந்தவை.

**நாட்டுப்புற இலக்கிய கூறுகள்:**

மக்கள் இலக்கியமாகிய நாட்டுப்புற இலக்கிய கூறுகள், பல பைந்தமிழ்ப் புலவர்களின் பாக்களில்

இடம்பெற்றன. கற்றறிந்த புலவர்கள் நாட்டுப்புறக் கவிஞர்களின் அடிச்சுவட்டில் சென்றுள்ளனர். புலவர் பெருமக்கள் உயிர்ப்பும் அழகும் ஒருங்கே அமைய நாட்டுப்புறப்பாக்களின் சாயலில் பல பாகங்கள் யாத்து தந்தனர். சங்க இலக்கியம் தொடங்கி அவ்வரலாறு தொடர் கதையாக நீள்கிறது.

சங்க இலக்கியத்தில் நாட்டுப்புற பாடல் கூறுகள்:

சங்க கால இலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கிய தன்மை புலப்படுவதை ஆறு. அழகப்பன் சங்ககாலம் பாடல்களுக்குக் கை கொடுக்கக் கூடிய கிராமிய தன்னுழைப்பு ,கவலையின்மை நிறைந்த காலமாகும். எனவே நாட்டுப்புறப் பாடல்கள் சாகாத் தன்மை பெற்றிருக்கச் சங்க கால வாழ்க்கை நன்கு அமைந்தது என்பர்.

"**தினைப்புனம் காத்த மகளிர்"** விளைந்த தினைப் புனைத்தில் கதிர் கவர கிளிகள் வந்த போது கிளிக்கு பாடல் பாடிக் கிளிகளை விரட்டினர். **"கிளிகடி மகளிர் விளிபடு பூசல்"**

பற்றி மலைபடுகடாம் கூறுகிறது. அது ஆலோலமாக இருக்கலாம். தினைக்குற்றும் மகளிர் வள்ளைப் பாட்டும் பாடினார்கள்.

தினைக்குறு மகளிர் இசைபடு வள்ளை என்பது மலைபடுகடாம். குறவை கூத்தின் போதும், துணங்கை கூத்தாடிய போதும், வேலன் வெறியாடியபோதும் பாடல்கள் பாடப்பட்டதை சங்க இலக்கியம் கூறுகிறது.

" குறவை தழீ இயாம் மரபுளிப் பாடித்
தேயா விழுப்புகழ் தெய்வம் பரவுதும்"

என்று கலித்தொகையும்

"பரதவர் மகளிர் குறவையொடு ஒழிப்ப "

என்று மதுரைக் காஞ்சியும், குறவை கூத்துள் பாடல் இடம் பெற்ற செய்தியைக் கூறுகிறது.

"தணந்ததன் தலையும் நீ தளரியலவரொடு"
"துணைங்கையாய் என வந்த கவ்வையின் கடப்பு அன்றோ"

என்று கலித்தொகை துணங்கைப் பாடலை குறிக்கிறது.

நாட்டுப்புறப் பாடல் அமைப்பில் சில பாடல்கள் சங்கத் தொகையில் காணப்படுகின்றன. கற்றறிந்த சான்றோர் பாடிய பாடல்கள் ஆதலின், முனை முறியாச் சொற்களால் ஆக்கப்பட்டுள்ளன. பாரி மகளிர் தம் தந்தையின் இறப்பிற்கு இரங்கிப் பாடிய

" அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம்; எம் குன்றும் பிறர் கொள்ளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின் வெண்றெறி முரசின் வேந்தர் எம் குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே"

என்னும் கையறு நிலைப்பாடலும் ஒப்பாரிப் பாடல்களாகக் கொள்ளத்தக்கனவே.

**நாட்டுப்புறப் பாடல்களின் இயல்புகள்**:

நாட்டுப்புறப் பாடல்களின் இயல்புகளாகக் கருதத் தக்க கூறுகள் திரும்பக் கூறல், யாப்பு இலக்கணம் கூறும் அந்தாதித் தொடை ஆகியவற்றையும் சங்கப் பாடல்களில் காண முடிகிறது. பதிற்றுப்பத்தில் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலை காப்பியாற்றுக் காப்பினார் பாடிய நான்காம் பத்து அந்தாதித் தொடையாக அமைந்தது ஐங்குறுநூற்றில் அம்மூவனார் பாடிய நெய்தல் திணைப் பாடல்களில் தொண்டிப்பத்து அந்தாதித்தொடையால் ஆனது. தடையில்லாத சிந்தனை, இசையொழுங்கு ஆகியவற்றை அப்பாடல்களில் காணலாம்.

ஐங்குறுநூறு தொண்டிப்பத்தில்,

1. திரை இமிழ் இன்னிசை அலைஇ அயலது
முழவு இமிழ் இன்னிசை மறுகுதொறு இசைக்கும்
தொண்டி அன்ன பணைத் தோள்
ஒண்தொடி அரிவை என் நெஞ்சு கொண்டோளோ"

2. ஒண் தொடி அரிவை கொண்டனள் நெஞ்சே
வண்டு இமீர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்
உரவுக்கடல் ஒலித்திரை போல
இரவி னானும் துயில்அறி யேனே

3. இரவி னானும் இன்துயில் அறியாது
அரவு உறு துயரம் எய்துப தொண்டித்
தண்நறு நெய்தல் நாறும்
பின்இரும் கூந்தல் அணங்குஉற் றோரே

4. அணங்குடைப் பனித்துறைத் தொண்டி அன்ன
மனம் கமழ் பொழில் குறி நல்கினள் நுணங்குக இழை
பொங்கு அரி பரந்த உண்கண்
அம்கலிழ் மேனி, அசை இய எமக்கே

என்ற -இப்பாடல்களில் அந்தாதி அமைப்பினைக் காணலாம்.

**சிலம்பில் நாட்டுப்புறப் பாடல் கூறுகள்:**

குடிமக்கள் காப்பியம் பாடிய இளங்கோவடிகள் அந்தந்த நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே அமைத்துக் காட்டுவதில் வல்லவர். அவர் சிலப்பதிகாரத்தில் பலவரிப் பாடல்களை இடையிடையே செய்து காப்பியச் சுவையைக் கூட்டியுள்ளார். அவையாவன: கானல்வரி, ஆற்றுவரி, சாத்து வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர் சுழ்வரி, குன்றக்குறவை, அம்மானை வரி, தினை நிலவரி, கந்துகவரி, ஊசல் வரி, நிலை வரி, வள்ளைப்பாட்டு முரிவரி என்பனவாம்.

சிலம்பின் வாழ்த்துக் காதையில் அம்மானை வரி, கந்துக வரி, ஊசல் வரி, வள்ளைப்பாட்டு ஆகிய புறப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

அம்மானைக் காய்களை மேலே எறிந்து விளையாடும் மகளிர் இருவர் பாடும் பாங்கில் அப்பாடல்கள் அமைந்துள்ளன.

"வீங்குநீர் வேலி உலகு ஆண்டு விண்ணவர்கோன்
ஒங்கு அரணம் காத்த உரவோன் யார் அம்மானை?
ஓங்கு அரணம் காத்த உரவோன் உயர் விசும்பில்
தூங்கு எயில் முன்று எறித்த சோழன் காண் அம்மானை சோழன் புகார் நகர பாடலோர் அம்மானை

மகளிர் பந்து ஆடும் போது பாடும் பாடல் கந்துக வரி எனப்படும்.

" பொன் இலங்கு பூங்கொடி! பொலஞ்செய் கோதை வில்லிட
மின இலங்கு மேகலைகள் ஆர்ப்ப, எங்கணும்
தென்னன் வாழ்க! வாழ்க! வென்று சென்று பந்து அடித்துமே
தேவர் ஆரமார்பன் வாழ்க என்று பந்து அடித்துமே

ஊசல் ஆடுங்கால் பாடும் பாடல் ஊசல் வரி எனப்படும்.

ஊஞ்சற்பாட்டு என்பது வழக்கு பாண்டவர்கட்கும் கௌரவர்கட்கும் நடந்த போரில் உதியஞ்சேரலாதன் பெருஞ்சோறு அளித்த செய்தி ஊசல் வரியில் இடம்பெறுகிறது.

வள்ளைப்பாட்டு உலக்கை பாட்டு எனவும் வழங்கும். மகளிர் உரலில் நெல்லையோ தினையையோ இட்டு உலக்கை கொண்டு குற்றுவர். அப்போது பாடப்படும் பாடல் வள்ளைப்பாட்டு எனப்படும்.

இங்ஙனம் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் பல நாட்டுப்புறப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**பக்தி இலக்கியத்தில் நாட்டுப்புறப் பாடல் கூறுகள்:**

கற்றறிந்த மக்களிடத்தும் கல்லா மக்களிடையேயும் தங்கள் இயக்கம் செல்வாக்குப் பெறவேண்டுமானால் அதற்கு ஒரே வழி தங்கள் பாடல்கள் நாட்டுப்புறக் கோலம் பூண வேண்டும் என்பதை அறிந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் பல பாடல்களை நாட்டுப்புறப் பாடல் சாயலில் இயற்றி அருளினார்கள்.

"பக்தி என்பது தன்னை மறந்த லயம்-
தன்னில் மறந்த லயம் தலைவனைத்
தேடும் லயம்" என்று ச.சண்முகசுந்தரம் குறிப்பிடுவார்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் திருப்பாவையும், மணிக்கவாசகப் பெருமானின் திருவெம்பாவை, குலசேகரனின் ஆலை நீள் கரும்பும், மன்னு புகழும்,வண்தாளின் இணையும்,பெரியாழ்வார் திருமொழியும் நாட்டுப் பாடல்களைச் சார்ந்தவை என்று கூறலாம்.

**நாலாயிரத்தில் நாட்டுப்புறப் பாடல் கூறுகள்:**

பெரியாழ்வார் தாயாகி, திருமாலைக் குழந்தையாக்கி தாலாட்டி மகிழ்ந்தார். தாய் இன்பம் தலையாயது தமிழின் முதல் தாலாட்டுப் பெரியாழ்வாருடையது.

அவர் தமிழில் புது நெறி புகுத்திய பெருந்தகையாளர், பிள்ளைத் தமிழுக்குத் தாய் பெரியாழ்வார் தான்.

" மாணிக்கம் கட்டி வைரம் இடைக்கட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் வீடு தந்தான்
மணிக் குறளனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேலோ."

சூடிக் கொடுத்த சுடர்கொடியாகிய ஆண்டாள் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் இறை உணர்வில் உருகியவர்; அவர் காகுத்தனைக் குழந்தையாக்கிக் களிக்கின்றார்.

திருவாசகத்தில் நாட்டுப்புறப் பாடல் கூறுகள்:

சமயக்குரவர்கள் நால்வர் ஆவர். அவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்போர் ஆவர். இவர்களுள் மாணிக்கவாசகர் பேரளவில் நாட்டுப்புறப் பாடல்களை யாத்துள்ளார்.

மாணிக்கவாசகர் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல் வகையைச் சார்ந்தவை.

பெண்கள் பொன்னிறமான வாசனைப் பொடி இடிக்கும் போது தம் தலைவனின் பெருமைகளைப் பாடிக்கொண்டே இடிப்பது வழக்கம். அந்தப் பாங்கில் மாணிக்கவாசகர் திருப் பொற் கண்ணத்தை அமைத்துள்ளார். பொற் கண்ணத்தை அவர்கள் எப்படி இடித்தார்கள் என்பதை,

"முத்து அணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்ணம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயல் கண்பளி ஆட ஆட
பித்தெம்பி ரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப்பொற் கண்ணம் இடித்து நாமே"

**முடிவுரை:**

நாட்டுப்புறப் பாடல்கள் சமூக மாற்றங்களை மிக எளிதில் பிரதிபலிக்க கூடியவை. மாறிவரும் உலகச் சூழலின் தேவைகள், மதிப்புகள், வாழ்க்கை முறைகள் போன்றவை எளிய மனங்களில் இடம் பிடித்து விடுகின்றன.

**தொகுப்புரை:**

இங்ஙனம் நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து இடையீடு இன்றி மலையருவியாக – காட்டு மல்லிகையாக ஏழை எளிய மக்களின் இதயக் கீதமாக விளங்குகின்றன.

**அடிக்குறிப்பு:**

கலித்தொகை முல்லைகலி, பா.எ.103, வரிகள், 75-76

கலித்தொகை,மருதக்கலி, பா.எ.66 வரிகள்,17,18

புறம்., பா.எ.112

சிலம்பு, ஊர்சூழ்வாயில், பா.எ.4, வரிகள். 39-42

சிலம்பு, துன்பமாலை, பா.எ.2, வரிகள். 20-24

சமூகவியல் நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.116

**துணைநூற்பட்டியல்**

கலித்தொகை

கௌரா பதிப்பகம்

சிலம்பு

முனைவர் ஜெயராமன்

திருவரசு பத்தக நிலையம்